

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பட்ஜெட் தாக்கல் கூட்டம், ஆகஸ்ட் 5ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தை காணொலி வாயிலாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தினார். இதில் தலைவர் அவர்களின் ஆலோசனையின் பேரில், தமிழ்நாடு நலன் சார்ந்து கழக சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் ஆற்ற வேண்டிய ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்துப் பல்வேறு கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

### தமிழ்நாட்டுப் பல்கலையில்

# தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மூன்றாம் இடம்!

## ‘வலைதளப்’ பதிவில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**புதுடெல்லி, ஜூலை 30-**

**நெல்லை மனோன்மணியம் சுந்தர னார் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தி னம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவ தாகப் பாடப்பட்டு தமிழ் அவமானப்படுத்தப்பட்ட வேதனையான நிகழ்வு நடந்தேறியது.**

இதனை அடுத்து ‘ட்விட்டரில்’ பதிவொன்று வெளியிட்ட கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், “வாய் இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா? என்று கேட்டவர், இப்போது இதைக் கண்டித்து ஏதாவது பேசுவாரா?” என வினவியுள்ளார்.



கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

**முதன்முறையாக தமிழ்நாடு பல்கலைக்கழகம் ஒன்றில், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டு, வந்தே மாதரம் பாடலுடன் பட்டமளிப்பு விழா தொடங்கியுள்ளது.**

**வாய் இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா என்று கேட்டவர், இப்போது இதைக் கண்டித்து எதாவது பேசுவாரா?**

இவ்வாறு அப்பதிவில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## த.வெ.க. அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது! முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு அறிக்கை!

*நெல்லை, ஜூலை 30 -*

தி.மு.க.நிர்வாகிகளுக்கு ஒரு இன்னல் என்றால் உடனடியாக களத்தில் இறங்கும் கலைஞர் அவர்கள், மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் சின்ன கலைஞரும் களமிறங்கி துணிச்சலோடு குரல் கொடுப்பதோடு வருகின்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் த.வெ.க. ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வரும் லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை,கற்பழிப்பு தமிழக உரிமைகளை பாதுகாக்க தவறியது போன்றவற்றை சட்டமன்றத்தில் எவ்வாறு விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. எம்.எல்.ஏக்களை தயார் படுத்தி வருவது த.வெ.க. அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

MLA கடத்தல்,குதிரை பேரம்,சோபா அன்பளிப்பு மூலம் குறுக்கு வழியில் ஆட்சிக்கு வந்த விஜய் தி.மு.க. வினரை குறி வைத்து காவல் துறையை ஏவி பொய் வழக்குகள் பதிவு செய்து தொடர் மிரட்டலில் ஈடுபட்டு வருகிறார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மார்க்கண்டேயன் கைது, செந்தில் பாலாஜி மீது பொய் வழக்கு, GenZ அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் கைது என்று த.வெ.க. அரசின் வெறியாட்டம் தொடரும் போதெல்லாம் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் கடும் கண்டனம் தெரிவிப்பதோடு சட்டபூர்வ நடவடிக்கை எடுத்து கட்சிக்காரர்களை காப்பாற்றி விஜயை ஓட, ஓட விரட்டி வருகின்றனர்.

தி.மு.கவினரால் சின்ன கலைஞர் என்று அன்போடு அழைக்கப்படும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காலம் நேரம் பார்க்காமல் பாளையங்கோட்டை சிறைக்கு வந்து மார்க்கண்டேயன் MLA வை சந்தித்து ஆறுதல் கூறியது தி.மு.க. கழக நிர்வாகிகள், தொண்டர்களிடையே பெறும் வரவேற்பையும், உற்சாகத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



கரூரில் நடிகர் விஜயை பார்க்க வந்த ரசிகர்கள், த.வெ.க.தொண்டர்கள் அவர் கண்ணெதிரே செத்து மடிந்த போதும் கண்டு கொள்ளாமல் தனி விமானம் மூலம் சென்னை திரும்பி பனையூர் பங்களாவில் பதுங்கி ஒளிந்ததை போல் தி.மு.க.கழகம் எந்த அடக்குமுறைக்கும் அஞ்சாது என்பதை புரிந்து கொள்ளுங்கள் CMsir ?

தி.மு.க.நிர்வாகிகளுக்கு ஒரு இன்னல் என்றால் உடனடியாக களத்தில் இறங்கும் கலைஞர் அவர்கள், மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் சின்ன கலைஞரும் களம் இறங்கி துணிச்சலோடு குரல் கொடுப்பதோடு வருகின்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் த.வெ.க. ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வரும் லஞ்ச, ஊழல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தமிழக உரிமைகளை பாதுகாக்க தவறியது போன்றவற்றை சட்டமன்றத்தில் எவ்வாறு விவாதிக்க வேண்டும் என்று தி.மு.கழக எம்.எல்.ஏ.க்களை தயார் படுத்தியும் வருவது த.வெ.க. அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஒன்றிய, மாநில அரசுகளின் அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சாமல் அவர்களது தவறுகளை சுட்டிக்காட்டி, தமிழகத்தின் பெருமையை காப்பாற்றும் தமிழக எதிர்க்கட்சித் தலைவரின் துணிவை பார்த்தாவது செயல்படுவீர்களா CM Sir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட துவாக்குடி நகர, வட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்தார். கூட்டத்தில், கழக வளர்ச்சி, பணிகள், கழகத்தை வலுப்படுத்துவது, மக்களுடனான தொடர்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து கழக நிர்வாகிகளுடன் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், நிர்வாகிகள் தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், துவாக்குடி நகரக் கழகச் செயலாளர் காயாம்பு மற்றும் வட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை மேற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் – சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

# பாரம்பரியப் பெருமை மிக்க வில்வித்தை - தேசிய விளையாட்டு ஆகுமா?

## மக்களவையில் — டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

பல நூற்றாண்டுகளாக வரலாற்றுச் சிறப்புமிக்க விளையாட்டாகத் திகழ்ந்து வரும் வில்வித்தைக்கு உரிய ஊக்கமும் மேம்பட ஆதரவும் அரசு தரவில்லை என்பது உண்மைதானா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த புராதனப் புகழ் பெற்ற வில்வித்தையை பேணி வளர்த்திட அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

வரலாற்றுப்பெருமை மற்றும் புராதனப் புகழ் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வில்வித்தை விளையாட்டை இந்தியாவின் தேசிய விளையாட்டாக அறிவிக்க ஒன்றிய அரசு முன்வருமா?

2036ஆம் ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுகள் இந்தியாவில் நடத்தப்படலாம் என்ற நிலையில் அதில் உயர்ந்த இடங்களை வென்றிட இந்திய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் உத்திகளின் விவரங்கள் என்ன?

என நாடாளுமன்றத்தில் திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் வினா எழுப்பினார்.

**விளையாட்டுத்துறை அமைச்சர் பதில்.**

பாரம்பரியப் பெருமை கொண்ட வில்வித்தை விளையாட்டு வளரவும் மேம்பாடு அடைந்திடவும் தேவையான முக்கியத்து வத்தை ஒன்றியஅரசு தர வேண்டும் என்ற நோக்கில் கேட்கப்பட்ட இந்த கேள்விக்கு ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறைக்கான அமைச்சர் டாக்டர் மன்



சுக் மாண்டவியா அவர்கள் விரிவான பதிலை நேற்றுமுன்தினம் (27.7.2026 அன்று) மக்களவையில் அளித்தார்.

**“உயர் முன்னுரிமை”யுடன் நிதி உதவி.**

வில் விளையாட்டைப் பொறுத்த வரை அதனை மேம்படுத்தும் முதன்மைப் பொறுப்பு தேசிய அளவிலான அமைப்பான இந்திய வில்வித்தை சங்கத்திடம் (Archery Association of India) தான் உள்ளது. எனினும், ஒன்றிய விளை யாட்டுத் துறை பல்வேறு திட்டங்கள், முயற்சிகள், உதவிகள் மூலம் இச்சங்கத்தின் செயல் பாடுகளுக்கு துணைபுரிகி றது.

தேசிய விளையாட்டுக் கள் இணையம் (நேஷனல் ஸ்போர்டஸ் ஃபெடரேஷன்) அமைப்புகள் வழியாக வழங்கப்படும் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வில்வித்தை விளையாட்டுக்கு “உயர் முன்னுரிமை” அடிப்படையில் நிதி அளிக்கப் படுகிறது. இந்திய விளையாட்டு ஆணையத்தால் (ஸ்போர்ட்ஸ் அத்தகரிட்டி ஆஃப் இந்தியா) கண்டறியப்பட்டுள்ள முக்கிய விளை யாட்டுகளில் வில்வித்தை யும் ஒன்றாகும். இந்த திட்டங்கள் வாயிலாகத் தேர்வு செய்யப்படும் வில்வித்தை விளையாட்டு வீர்களுக்கு தங்குமிடம், உணவு, திறன்மிக்க பயிற்சியாளர்கள் வாயிலாக உயர்தர அறிவியல் சார்ந்த பயிற்சி, பயிற்சிக்கானகான நவீன கருவிகள், மருத்துவ வசதிகள், ஆடுகள வசதிகளுடனான உயர்ந்த உள்கட்டமைப்பு, போட்டிச்சூழலை உருவாக்கிடும் ஏற்பாடு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

**2022 முதல் 124 அணிகளின் வில்வித்தைப் போட்டிகள்.**

“கேலோ இந்தியா” திட்டமும் வில்விளையாட்டுக்கு முன்னுரிமை அளிக்கிறது. மேலும், 34 மாநிலங்கள்/ஒன்றிய பிரதேசங்களில் உள்ள கேலோ இந்தியா மாநிலச் சிறப்பு மையங்கள், மொத்தம் 55 கேலோ இந்தியா மையங்கள், மற்றும் 21 கேலோ இந்தியா சான்றளிக்கப்பட்ட அகாடமி களும் வில்வித்தை யை ஏற்றுக்கொள்ளப்பட்ட (Accredited)விளை யாட்டுப் பிரிவாக அறிவித்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சென்ற 2022 ஆம் ஆண்டு முதல் நாட்டின் 15 மாநிலங்களில், பெண்கள் குழுக்கள் உட்பட, மொத்தம் 124 வில்வித்தை அணிகளின் போட்டிகள் நடத்தப் பட்டுள்ளது.

ஆசியா மற்றும் ஒலிம்பிக்ஸ் சர்வதேச போட்டிகளில் இந்திய வில்வித்தை பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்கிலும் மகளிருக்கான விளையாட்டு (Sports For Women SFW) முன்னெடுப்பாகவும் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**தேசிய விளையாட்டு அந்தஸ்து பரிசீலனையில் இல்லை**

வில்வித்தையை இந்தியாவின் தேசிய விளையாட்டாக அறிவிப்பது குறித்து ஒன்றிய அரசு தற்போது பரிசீலிக்க படவில்லை.

2036 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சர்வதேச ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்காக இந்திய விளையாட்டு வீரர்களை தயார்படுத்தும் முயற்சிகள் அனைத்தும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்றிய விளையாட்டு அமைச்சகம், தேசிய விளையாட்டு இணையங்கள் மற்றும் தேசிய விளையாட்டு ஆணையசத்துடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் பணியாற்றி இந்தியாவின் பல்வேறு பிரிவு விளையாட்டுக் குழுக்களை யும் தனிநபர் விளையாட்டு வீரர்களையும் தயார்படுத்தி வருகிறது. இதற்குத் தேவைப்படும் அனைத்து விதமான உதவிகளையும் ஆதரவையும் அரசு வழங்கி வருகிறது. தனிப்பட்ட வீரர்களுக்கும் அவர்களின் குறிப்பிட்ட விளையாட்டுக்கு உரித்தான சிறப்புத் தேவைகளும் “டார்கெட் ஒலிம்பிக் போடியம் ஸ்கீம் Target Olympic Podium Scheme (TOPS)” என்றழைக்கப்படும் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசினால் வழங்கப்படுகிறது.

ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாளவியா தனது பதிலில் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

# சேலம் மாவட்டத்தில் தெழிற் பயிற்றுநர் தேர்வில் முறைகேடு!

*சேலம், ஜூலை 30 -*

தமிழக வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் அரசு மற்றும் தனியார் ஐ.டி.ஐ. படிப்பில் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

இவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்றுநர் தேர்வு நடத்தப்படுகிறது.

இதையொட்டி இவர்களுக்கு ஆண்டுதோறும் ஜனவரி ஜூலை மாதங்களில் தேர்வு நடைபெறுவது வழக்கம் அதன் படி 2026ம் ஆண்டுக்கு இம்மாதம் தேர்வு மேட்டூர் அரசு ஐ.டி.ஐ. வளாகத்தில் நடைபெற்ற அகில இந்திய தொழிற் தேர்வில் பங்கேற்ற மாணவர்களிடம் பணத்தை பெற்றுக் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவியதாக கூறப்படுகிறது. தேர்வு நேரத்தில் அரசு ஐ.டி.ஐ. ஆசிரியர்கள் தேர்வு அறைக்கு உள்ளே சென்று மாணவர்களுக்கு உதவிடும் வீடியோ ஒன்று வெளியாகி உள்ளது. இது குறித்து மேட்டூர் சமூக ஆர்வலர்கள் கூறியதாவது இங்கு தேர்வு நடை பெற்ற சமயத்தில் சி. சி.டி.வி. கேமராக்கள் அணைக்கப்பட்டு ஆசிரியர்கள் நேரடியாக சென்று மாணவர்களுக்கு விடை எழுத உதவுவது போன்ற வீடியே வெளியாகி உள்ளது

இந்த தேர்வுக்கு வெளியில் இருந்து மேற்பார்வையாளர்களாக வருபவர்களுக்கு பணம் தர வேண்டும் என்பதற்காக ஒவ்வொர மாணவர்களிடமும் தலா ரூ. 500/ வாங்கி உள்ளதாக கூறுகிறார்கள்.

ஆக த.வெ.க. ஆட்சியில் கரெப்ஷன் கமிஷன் கலெக்ஷன் நடைபெற்று வருகிறது என்பதற்கு மேட்டூரில் நடைபெற்ற தொழிற்கல்வி தேர்வு அம்பலப்படுத்தியுள்ளது சான்று ஆகும்.

# கேதையுறும்பில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி!

## முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. ஆய்வு!

*ஒட்டன்சத்திரம், ஜூலை 30 -*

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கேதையுறும்பு ஊராட்சியில் ரூ.25 கோடியில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டு மைதானத்தை திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உடன்இருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கேதையுறும்பில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியை அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.